# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 24.02.2026**

**அசல் வழக்கு எண். 188/2018**

**பி.வா.சா.1 (அமுதா) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள பாஸ்கரபாண்டியன் மற்றும் முத்துப்பாண்டி தேவர் ஆகியோரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு தபசில் சொத்துக்களின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பிராது தபசில் சொத்துக்கள் மொத்தமும் ஆதியில் எனது தாயார் அன்னத்தாய்க்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அன்னத்தாய் பிராது தபசில் சொத்துக்களை 7 மனைகளாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் சரியல்ல. எனது தாயாருக்கு படிக்கத்தெரியாது. அவரை ஏமாற்றி கூட்டிச்சென்று அவரது கைநாட்டை மோசடியாக பெற்றுவிட்டார். எனது தாயாரிடமிருந்து வாதிகள் பிராது தபசில் சொத்துக்களை கிரையம் பெற்ற சமயத்தில் அந்த சொத்துக்கள் மனைகளாக இருந்ததா என்றால் இல்லை. என் தாயாரிடமிருந்து வாதிகள் மோசடியாக கைநாட்டு பெற்றபோது அந்த இடங்கள் புஞ்சை இடங்களாக இருந்தன. எனது தாயார் அவரது கைரேகையை மோசடியாக வாதிகள் பெற்றார்கள் என தெரிவித்து அவர்களுக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. எனதுதாயார் இறப்பிற்கு பிறகு என் தாயாரிடமிருந்து வாதிகள் மோசடியாக கிரையம் பெற்றார்கள் என தெரிவித்து அவர்களுக்கு எதிராக நான் வழக்கு எதுவும் தாக்ல செய்தேனா என்றால் இல்லை. வாதிகள் என் தாயாரிடமிருந்து 1984 ல் எழுதி வாங்கினார்கள் என்றால் சரிதான்.

2. பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட பாதைக்கு வடபக்கத்தில் எனது கையிருப்பு இடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வடபக்கத்தில் உள்ள இடத்தை என் தாயார் யாருக்கும் விற்பனை செய்யாமல் அவரது கையிருப்பில் வைத்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி வடபக்க இடத்திற்கு கீழ்பக்க இடம்தான் 1ம் வாதி கிரையம் பெற்ற இடம் என்றால் சரிதான். என் கையிருப்பு இடத்திற்கு மேற்கு பக்கத்தில் தென்வடல் சிமெண்ட் ரோடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிமெண்ட் ரோடு அதற்கு தெற்கு பக்கத்தில் உள்ள திருநெல்வேலி – சங்கரன்கோவில் மெயின்ரோட்டில் சேர்கிறது என்றால் சரியல்ல. அந்த சிமெண்ட் ரோடு எங்கள் இடத்திற்குள்ளேயே முடிந்துவிடும்.

என் கையிருப்பு இடத்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ள திருநெல்வேலி ரோட்டிற்கு மேற்படி சிமெண்ட் ரோடு வழியாகத்தான் செல்வோம் என்றால் சரியல்ல. எங்கள் இடம் வழியாக திருநெல்வேலி ரோட்டிற்கு செல்வோம்.

3. பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கு தெற்கில் திருநெல்வேலி ரோட்டிலிருந்து அந்த சொத்து வரை அமைந்துள்ள 4 சென்ட் இடத்தை எனது தாயார் கிரையம் பெற்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் கையிருப்பு இடத்திற்கு தெற்குபக்கத்தில் உள்ள திருநெல்வேலி ரோட்டிற்கு நான் மேற்கூறியவாறு எங்கள் இடம் வழியாக செல்வோம் என்று கூறினேன் என்றால் சரிதான். மேற்படி இடம் எனது அம்மா கிரையம் பெற்ற இடமா என்றால் இல்லை. அது அவரது பூர்வீக இடம். எனது கையிருப்பு இடத்திற்கு எனது அம்மாவின் பூர்வீக இடத்தை பாதையாக பயன்படுத்தி அதன் வழி நாங்கள் செல்வோமா என்றால் செல்வோம். மேற்படி சிமெண்ட் ரோட்டிற்கு மேற்கில் நிறைய வீடுகள் உள்ளனவா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது தபசில் சொத்துக்களுக்கு எப்போது கடைசியாக சென்றேன் என்றால் சுமார் 1 வருடத்திற்கு முன்பு சென்றேன். நான் ஒருவருடத்திற்கு முன்பு பிராது தபசில் சொத்துக்களுக்கு சென்று பார்த்தபோது மேற்கூறிய சிமெண்ட் ரோட்டிற்கு மேற்கில் வீடுகள் இருந்ததை நான் பார்த்தேனா என்றால் நான் ஒருவருடத்திற்கு முன்பு சென்றபோது முத்துப்பாண்டி என்னிடம் பிரச்சனை செய்ததால் அங்கிருந்து உடனடியாக சென்றுவிட்டேன். வீடுகள் இருந்ததை பார்க்கவில்லை.

4. என் கையிருப்பு இடத்திற்கு கீழ்பக்கம் உள்ள இடம் பாஸ்கரபாண்டியனின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். முத்துப்பாண்டியனுக்கு பாத்தியப்பட்ட இடம் பாஸ்கரபாண்டியனின் இடத்திற்கு கிழக்கு பக்கத்திற்கு கீழக்கடைசியில் உள்ளது என்றால் சரிதான். முத்துப்பாண்டியன் இடத்திற்கும், பாஸ்கரபாண்டியன் இடத்திற்கும் இடையில் 4 முதல் 9 பிரதிவாதிகளின் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். செல்வராஜ் மற்றும் வனராஜா ஆகியோர் அவர்களது காலியிடங்களில் வீடு கட்டியுள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் அங்கு செல்வதில்லை. வாதிகளின் இடத்திலிருந்து மேற்கில் உள்ள சிமெண்ட் ரோட்டிற்கு செல்வதற்கு பிராது 1ம் தபசில் 1ம் அயிட்ட பாதை வழியாகதான் செல்லமுடியும் என்றால் சரியல்ல.

3. 1ம் வாதி அவரது இடத்திலிருந்து தெற்கு நோக்கி சென்று ரோட்டை அடைந்துகொள்ளலாம். 2ம் வாதி அவரது வீட்டிலிருந்து கிழக்கு நோக்கி சென்று ரோட்டை அடைந்துகொள்வார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள இடத்தைதான் பாதையாக தெரிவித்து வாதிகள் அதில் உரிமை கோருகிறார்கள் என்றால் சரிதான். அந்த இடம் பாதை இல்லை. அது எங்களுக்கு பாத்தியப்பட்ட இடம். **அந்த புகைப்படம் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி இடத்தில் பாதை அமைப்பு உள்ளது என்றால் சரியல்ல. அந்த இடத்தில் வாதிகள் நடக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. அந்த இடம் எங்களுடையது. பாதை இல்லை.

4. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் பிராது தபசில் பாதைகளை தவிர்த்து வாதிகளுக்கு அவர்களது இடத்திலிருந்து செல்வதற்கு வேறு வழி இருப்பதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக ஒருபாதை சுமார் 15 அடி அகலம் இருந்தால்தான் அதில் வண்டிகள் செல்லமுடியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கீழக்கடைசியில் உள்ள முத்துப்பாண்டியனின் இடத்தை அவர்தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

5. இவ்வழககில் நான் என்ன தெரிவித்து கட்சி செய்கிறேன் என்றால் வாதிகள் பாதை என்று கோரும் இடம் பாதை கிடையாது என்றும், அந்த இடம் எங்களுக்கு சொந்தமான தனிப்பட்ட இடம் என்றும் கட்சி செய்கிறேன். பாஸ்கரபாண்டியன் மற்றும் முத்துப்பாண்டியன் ஆகியோரது இடம் தற்போது காலிமனையாக உள்ளதா என்றால் பாஸ்கரபாண்டியனின் இடம் காலிமனையாக உள்ளது. முத்துப்பாண்டியனின் இடம் காலிமனையாக உள்ளதா என்று எனக்கு தெரியாது. எனது தாயார் வாதிகளுக்கு பிறப்பித்துக்கொடுத்த ஆவணங்களில் பாதை பற்றி குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

6. எனது தாயார் சர்வே எண்.353ல் மேல்பக்கம் தென்கடைசியில் உள்ள இடத்தை 7 மனைகளாக பிரித்து வாதிகள் மற்றும் 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு சரியான பிரதிபிரயோஜனத்தின்பேரில் கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு எனது தாயார் அளித்த கிரையப்பத்திரத்தில் அந்த கிரைய சொத்திற்கு தென்பக்கம் வண்டிப்பாதை இருப்பதாக தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய சொத்திற்கு தெற்குமாலாக வண்டிப்பாதையை குறிப்பிட்டு எனது தாயார் வாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் அவர்கள் கிரையம் பெற்ற

இடத்திற்கு அவர்கள் பெயரில் பட்டா மாற்றம் பெற்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிரையம் கொடுக்கப்பட்ட சமயத்தில் கிரைய சொத்துக்களுக்கு மேல்பக்கம் சிமெண்ட் சாலை இல்லாததால் பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கு தெற்குபக்கத்தில் உள்ள புல எண்.352/1A ல் 4 சென்ட் இடத்தை பாதை அமைப்பிற்காக கிரையம் வாங்கி எனது தாயார் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கு வடபக்கத்தில் எனது இடம் உள்ளது என்றால் சரியல்ல. பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திற்கும் சேர்த்து நான் பட்டா வாங்கிவிட்டு வாதிகளின் பாதை உரிமையை மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு அவர்களது இடத்திலிருந்து தெற்குபக்கத்தில் உள்ள திருநெல்வேலி சாலைக்கு செல்வதற்கு பிராது 1ம் தபசில்2ம் அயிட்ட பாதையை தவிர்த்து வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல. வாதிகள் கிரையம் பெற்ற காலத்திலிருந்து பிராது 1ம் தபசில் சொத்தை பாதையாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனது தாயார் கிரையம் கொடுத்ததன்பேரில் பிராது தபசில் சொத்துக்களில் வாதிகளுக்கு உரிமை ஏற்பட்டதால் அந்த உரிமையை மறுத்து கட்சி செய்வதற்கு முரண்தடை கோட்பாட்டின்கீழ் தடை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளாகிய நாங்கள் பிராது 1ம் தபசில் 2ம் அயிட்ட சொத்தில் பாதை இல்லை என்று மறுக்கிறோம் என்றால் சரிதான். எனது தாயாரிடமிருந்து வாதிகள் கிரையம் பெற்ற இடத்தை பொறுத்து நாங்கள் ஆட்சேபிக்கவில்லை என்றால் எங்கள் இடத்தில் உள்ள பாதையை தவிர்த்து எனது தாயாரிடமிருந்து அவர்கள் கிரையம் பெற்ற சொத்தை பொறுத்து நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. நான் இவ்வழக்கிற்காக வாதிகள் எனது தாயாரிடமிருந்து மோசடியாக கிரையம் பெற்றதாக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்துக்களை எனது தாயார் வாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டநிலையில் அந்த சொத்துக்கள் பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகள் உரிமை கோரமுடியாது என்றால் சரியல்ல. வாதிகள் பிராது தபசில் சொத்துக்கள் பொறுத்து கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

4 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி வாதிகள் தரப்பு

வழக்கறிஞரால் எடுக்கப்பட்ட குறுக்குவிசாரணையை அடாப்ட் செய்துகொள்வதாக தெரிவித்தார்.

**மறுவிசாரணை இல்லை.**